போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆனி 20 | வீச்சு 45
3-7-48 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:



இந்தியை எதிர்க்கிறோம்--ஏன்

"ஆமாம் இவர்களுக்கு என்ன வேலை? எதையாவது ஒன்றை எதிர்த்துக் கொண்டே இருப்பது தான் இவர்கள் தொழில். அதிலும் காங்கிரஸ்காரர் செய்கிற எந்தக் காரியத்தைத்தான் இவர்கள் 'சொட் ' சொல்லாமல் இருந்தார்கள்?" என்று சிலர் பேசுகின்றனராம், நாம் ஆளவந்தார்கள் நாட்டுக்கு அளித்துள்ள கட்டாய இந்தித் திட்டத்தை எதிர்ப்பதுகண்டு. இப்படிப் பேசுபவர்களிலேயே இரு சாரார் உண்டு. இரு சாராரின் பேச்சும் ஓரே 'தினுசா'யிருந்தாலும் இருவரின் நினைப்பும் நோக்கமும் வேறு வேறு. ஒரு சாரார்—அவர்கள் நம் பரிதாபத்திற்குரியவர்கள்—கட்டாய இந்தி கூடாது என்பதற்கான ஏராளமான ஆதாரங்களை நாம் தருவதுகண்டு அவை உண்மையில் நியாயமானவை—அவற்றை மறுத்துக் கூறுவது இயலாது—அவற்றை மறுப்பது தம்மையே தாம் பரிகசிப்பது போன்றது என்பதை நன்றாக உணர்ந்திருப்பவர்கள். ஆனால் உணர்ந்ததை வெளியில் சொன்னால், இந்தி வேண்டும் என்று தாங்கள் கூறி வருகிற கூற்று பொய்யாய் முடியுமே, பிறர் கேலிக்கும் கண்டனத்துக்கும் தாம் ஆளாக நேருமே என்ற அச்சம் மிகக் கொண்டு, தம்முடைய அச்சத்தையும் அவமானத்தையும் வெட்கத்தையும் துக்கத்தையும் மறைப்பதற்காக, இந்த சூனாமானாக்களுக்கு இதுதானப்பா தொழில் என்று கூறுபவர்கள். அதாவது தங்கள் கொள்கைத் தவறுதலை மறைக்கும் முகமூடியாக இந்த வாதத்தைக் கையாள்பவர்கள். இவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஏனெனில் இவர்களுடைய உள்ளம் நம்பக்கம். இத்தகையவர்கள் தங்கள் உள்ளம் உதடு இரண்டையும் 'இருதுருவங்களாக' வைத்திருப்பவர்கள் அதாவது உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உத்தமர்கள். இவர்களுடன் வாதாடுவதோ, இவர்களை நம் பக்கம் திருப்ப எண்ணுவதோ, திருப்ப முடியும் என்று நம்புவதோ வீண்வேலை. தூங்குபவர்களை எழுப்பலாம்—எழுப்ப முடியும்! அது எளிதுகூட., சிலர் நாம் அருகே செல்வதைஎப்படியோ உணர்ந்து அந்த அளவிலேயே எழுந்து விடுவார்கள். சிலர் நாம் பக்கத்தில் உட்கார்ந்து எதையாவது படித்துக் கொண்டிருந்தால் அந்த 'ஓசை'யாலேயே எழுந்து விடுவார்கள். சிலரை எழுப்ப நாம் பெயரிட்டுக் கூப்பிட்டால்போதும். சிலரை மெல்லத் தட்டினால் எழுந்து விடுவார்கள். சிலர் உண்டு, புரட்டிப் புரட்டி அரை மணி நேரம் 'மல்லுக்கு' நின்று எழுப்பப் படவேண்டியவர்கள்! தூங்குபவர்களிலே பல 'ரகம்உண்டு, அதுவே போலத்தான் அவர்களை எழுப்புவதிலேயும் பல ரகம் உண்டு. தூங்குகிறவர் எந்த ரகத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் அவருக்கு ஏற்ற எழுப்புமுறையைக் கையாண்டால் அவரை எழுப்பி விடலாம். ஆனால் தூங்காமல் இருந்துகொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? இந்த ரகத்தைச் சேர்ந்ததுதான் சென்னை "தினசரி" ஏடு! அதற்கு நன்றாகத் தெரியும் தமிழ் நாட்டில் இந்தி நுழைந்தால் தமிழ் கெடும் என்பது. ஆனாலும் இந்தி நுழைவால் தமிழ் கெடாது என்றுதான் அது சொல்லும். கெடும் என்பதற்கான காரணங்கள் ஓராயிரத்தை நாம் சொன்னாலும், தினசரி தன் கூற்றை மாற்றிக் கொள்ளாது. மாற்றிக் கொள்ளாது என்றால் அது, நம் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றல்ல அர்த்தம். ஒப்புக் கொள்கிறது. ஆனால் ஒப்புக் கொள்வதை வெளியே சொல்ல வெட்கம், தான் தேசீய வட்டாரத்தில் உலவுவதால். வெட்கம் மட்டுமல்ல; போலிக் கௌரவம் கூடத்தான்! இந்த சூனாமானாக்கள் சொல்வதை நாம் ஒப்புக் கொள்வதாகக் காட்டிக்கொள்ளலாமா என்ற எண்ணம்! —இது ஓர் 'ரகம்'.

நம்மைக் கேலி பேசுபவர்களிலே மற்றொரு 'ரகம்' உண்டு. உண்மையிலேயே இந்தி வருவதால் தமிழ் கெடாது என்று நம்புபவர்கள்.
தமிழகத்துக்கு இந்தி அவசிய
தமிழர் இந்தியைக் கற்கத்தா
வேண்டும், கற்பதால் கேடொன்
மில்லை, இந்தி தெரிந்தால்தா
நாம் வட நாட்டில் 'தலைநிமிர்ந்
நிற்க முடியும் என்ற கருத்துடை
வர்கள். இவர்கள் உண்
நிலையை உணராதவர்கள், ஆக
தவறான கருத்துக் கொண்டி
கிறார்கள். இவர்களுக்கு உண்
யின் உருவம் புலப்பட்டால் அத
ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்ட
கள். இத்தகையவர்கட்கு இ
பற்றிய உண்மையை விளக்
கூறுவதுதான் நம் கடமை.
பணியும் இவர்களிடம் தா
இந்தி வேண்டாம் என்பதற்கா
காரணங்களை நாம் நிரல் நிர
எடுத்து விளக்குவதும் இத்தகை
வர்கள் மனதிலே வளர்ந்துள்
குழப்பச் செடிகளைக் கல்லியெ
வதற்குத்தானே தவிர 'தினச

(4-ம் பக்கம் பார்க்க)

அட்டைப் படம்

"பெட்ரோல் பங்க் அருகிலே சி
ரெட் பிடிக்கலாமா சார்" என்
கேட்டுக்கொண்டே நம் அலுவ
கத்துக்கு வந்தார் ஓவியர் ஏ.
சாமி. "ஆபத்தான செயலாச்
அது! விளைவு விபரீதமாகுமே
என்றோம் நாம். அமைச்ச
செய்கிறாரே இந்த விபரீதத்
என்றார் அவர். இருக்காதே ஒ
காலும் என்றோம் நாம். என்
இருக்காது! இதோ பாருங்க
என்று சொல்லிக்கொண்டே இ
தப் படத்தை நீட்டினார் ஓவிய
பார்த்தோம்! அவர் கூறுவது ச
தான் என்று தெரிந்தது. அவி
யார் தமிழ்நாட்டில் கட்டாய இ
தித் திட்டத்தை நுழைத்திருக்கிற
அதாவது பெட்ரோல் பங்கி
சிகரெட் தீப்பொறிகளைப் பற
விடுகிறார்! சிறு பிள்ளைக்கும் தெ
யும் இது ஆபத்தான விளையாட்
என்று! ஆனால் அமைச்சருக்கு
தெரியவில்லை. ஏன்? அதுதா
நமக்குந் தெரியவில்லை.

புத்தம் புதிய புறநானூறு!

[தமிழ் நாட்டில், முன்பு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஓர் புதிய புறநானூறு, தமிழருக்கு! அந்தப் போராட்டத்தின் அடுத்த அத்தியாயம் தொடங்கப்பட விருக்கும் இந் நாள் அந்தப் பழைய வரலாற்றை நினைப்பூட்டிக்கொள்வது நமக்கு மட்டுமல்ல, சர்க்காருக்கும் நல்லதல்லவா, ஆகவேதான், ஏற்கெனவே "பொன்னி" பொங்கல் மலரில் வெளியாகி இருக்கிறது என்றபோதிலும், மீண்டும் இக் கட்டுரை இங்கு தரப்பட்டுள்ளது. நாட்டில், இந்திப் போர் மூளுமானால், வெற்றி, எவர் தோளைத் தழுவும் என்பதை அறிய ஆரூடம் பார்க்கத் தேவையில்லை; முன்னுள் போராட்டத்தை இரத்னச் சுருக்கமான முறையில் சித்தரிக்கும் இக் கட்டுரையைப்படிப்பதே போதுமானது. நீங்கள் படியுங்கள். அதோடு, அந்தப் போராட்டத்தை ஓரளவு மறந்திருக்கும் நம் சர்க்காருக்கும் படித்துக் காட்டுங்கள்—அவர்களுக்குப் புரிகிற மொழியில்! புரிகிற விதத்தில்!!]

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்
தூங்கி விழித்தல் நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்த்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

ஆம்! சேரன் செங்குட்டுவனின் சந்ததியினர் எழுப்பிய வீர முழக்கம்தான் இது! ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் சொந்தக்காரர்கள் கடலோசையெனக் கிளப்பிய தமிழோசைதான் இது! இமயத்தில் புலி பொறித்த திருமாவளவனின் பின்னவர்கள் பாடிய இருதய கீதமே இது! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டின் குரல்தான் இது!

பாசறையிலே இருந்து கிளம்பும் தந்துபி போல—அல்ல!—சிங்கத்தின் குகையிலே இருந்து பிறக்கும் இடி முழக்கம்போல அன்று தமிழன் நெஞ்சிலிருந்து உருண்டோடி வந்தது இந்தப் பண்.

'தமிழுக்கு ஆபத்து' என்று தமிழர் பிரான் இராமசாமி' கூறக் கேட்டான் தமிழன். அவ்வளவுதான்! படைத்தலைவர் ஆணை பிறந்துவிட்டது என்றெண்ணினான்; தமிழ் மேவும் எட்டுத் திசையெங்கும்' போர்முரசு கொட்டினான்; இன்பத் தமிழ் காக்கப் போர் பிறந்தது; "வீர இளங் காளைகளே வம்மின் வம்மின்" என்று அன்பழைப்பு விடுத்தான்; "புலவர்களே, தமிழின் தொண்டர்களே, பற்ற தாய்மாரே, என் அருமைத் தோழியரே, ஓடோடி வாருங்கள்" என்று கூவினான். வந்தது தமிழர் கூட்டம்; தொடங்கிற்று மொழிப் போராட்டம்.

பெண்ணுக்காகவும், பிறந்த மண்ணுக்காகவும் போராடிய கதைகள் பல உண்டு. பகைவர் கொட்டம் அடங்கவும் சம்மவர் வீறுபெற்றுயரவும் என்று படை திரட்டினோர் எண்ணற்றவர் உலக வரலாற்றில்! தமமை வளர்த்த மதத்திற்காக உயிர் கொடுத்தோர் ஆயிரமாயிரம். ஆனால் தம்மை ஈன்றெடுத்த தாய் மொழிக்கு 'வேட்டு வைப்பார்' கொடுஞ் செயலை வீழ்த்துதற்காக வென்று ஒரு போராட்டம் தொடங்கி நடத்திய பெருமை வேறெந் நாட்டார்க்கும் இல்லை; வேறெம் மொழியார்க்கும் இல்லை—தமிழர்க்கே உண்டு—இந்த நூற்றுண்டில் பிறந்த தமிழர்க்கே உண்டு!

1937-ல் தமிழ் நிலத்தை ஆள வந்தார் அன்பர் ஆச்சாரியார். "வேண்டும் இந்தி" என்றார். "ஆகாதே" என்றனர் தமிழர். "கட்டாயம் வைப்பேன்" என்றார். "தட்டாமல் தவிர்ப்போம்" என்றது தமிழ் மறவர் கூட்டம். "சொன்னது சொன்னதே; இந்தி வருவது வருவதே" என்றார் முதலமைச்சர். "எப்பக்கம் வந்து புகுந்துவிடும், இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?" என்று கேட்டனர் தமிழ் அன்னைமார். சிறைச்சாலையைச் சுட்டிக் காட்டினார் முதல்வர். "அது எமக்குப் பூஞ்சோலை" என்றன தமிழ்க் கிள்ளைகள்.

"கிள்ளைகளே பேசாதீர், போர் உண்டு, களம் செல்வீர்" என்றார் பெரியார். நிமிர்ந்து பார்த்தான் தமிழன். தன் தலைவன் ஆணை கண்டான். அவர் அருகே அடலேறு என ஆர்ப்பரிக்கும் முறுக்கு மீசை பாரதியைக் கண்டான். பக்கத்தே நிற்கும் சைவப் பெரும்புலவர் மறைமலை அடிகளாரைக் கண்டான். பேராசிரியர் கா. சுப்பிரமணியனார், தமிழவேள் த. வே. உமாமகேசுரனார் போன்ற புலவரெலாம் அணி அணியாய் நிற்கக் கண்டான். பெரியாரின் இருபுறமும், அண்ணாதுரை விசுவநாதன் எனும் இரண்டு இளஞ் சிங்கங்கள் நிற்கக் கண்டான். சர். பன்னீர்ச் செல்வம் போன்ற கிறித்தவரை, கலிபுல்லா, தாவுத்ஷா என்றின்ன இஸ்லாமியரை நிரல் நிரலே கண்டான். "வாழிய இத் தமிழர் முன்னணி" என்று வாழ்த்திற்று அவன் வாய். "வாழ்க எம் பெரியார்" என்று கூவிற்று அவன் நெஞ்சு. பேசவில்லை; பறந்தன கால்கள்; சென்று நின்றன களத்தில்!

10-8-1937-ல் அந்நாள் சென்னை—முதலமைச்சர் ஆச்சாரியார், கட்டாய இந்தியை முதல் மூன்று படிவங்களில் பயிலும் பச்சைப் பசும் கிள்ளைகள் படித்தே தீர வேண்டும் என்று முதன் முறையாகக் குறிப்பிட்டார். "தமிழ் நாட்டில் தமிழ் மொழியே கட்டாயம் மற்ற இன்றைய நிலையில் இந்திக் கட்டாயம் தமிழர்க்குப் பெருங் கேடு விளைவிக்கும்" என்று தமிழகம் ஒரு குரலில் முழங்கிற்று. நாடெங்கும் இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள். தமிழர் வாழும் இடமெங்கும் கண்டனக் கூட்டங்கள். தமிழ் மாவட்டந்தோறும் மாநாடுகள். பட்டி தொட்டிகளிலெல்லாம் பெரியாரின் பெருமுழக்கம். அமைச்சர்கள் செல்லு மிடமெல்லாம் வெறுப்பினைக் காட்டும் கறுப்புக் கொடி! அன்று "தமிழ் வாழ்க! இந்தி வீழ்க!" எனும் முரசொலி எழாத இடமில்லை; இந்தி எதிர்ப்புணர்ச்சி தோன்றிப் பரவாத வட்டாரமில்லை. "வேண்டாம் இந்தி" என்று சொல்லாத தமிழர் இருந்தனர்—ஆனால் நினையாத தமிழரில்லை.

1937 டிசம்பரில் திருச்சியிலும் 1938 பிப்ரவரியில் காஞ்சியிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏடுகளின் பாசாங்கு நிலையை மனதில் கொண்டு அல்ல.

இந்தியை நாம் எதிர்ப்பது காங்கிரஸ்காரர் கூறுவதையெல்லாம் எதிர்க்கவேண்டும் என்ற நம் வழக்கப்படி என்று கூறுகிறார்களே, இதைவிட உண்மைக்கு மாறான கருத்து வேறிருக்கமுடியாது. உண்மையைச் சொல்லவேண்டுமானால், இந்த உண்மையையும் ஆனந்த விகடன் தமிழிலே கூறுவதானால், அந்த வாக்கியம் ஓர் அபத்தக் களஞ்சியம். காங்கிரஸ்காரர் கூறுவதையெல்லாம் எதிர்ப்பது அல்ல நம் பழக்கம். காங்கிரஸ்காரர்கள் கொண்டுவருகிற நல்ல திட்டங்கள் அத்தனைக்கும் நாம் பூரண ஆதரவு தந்திருக்கிறோம், சில சமயம் அளவு கடந்துங்கூட! காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த இனாம் ஜமீன் ஒழிப்பு மசோதாவை வைத்தியநாதர்களும் வரதாச்சாரிகளும் போன்ற காங்கிரஸ் எம். எல். ஏக்களே குழி பறித்த வேளையில் நாம் தான் அதற்கான முழு ஆதரவையும் கொடுத்தவர்கள். மதுவிலக்கு திட்டம், கோயில் நுழைவுத் திட்டம் போன்ற பல பிரச்சினைகளில் நாம் அவர்களுடன் பூரணமாக ஒத்துழைத்திருக்கிறோம். ஆனால் இந்தியைப் பொறுத்த வரை, சர்க்கார், தவறான பாதையிலே செல்கிறார்கள், இது பல ஆபத்தான விளைவுகளைத் தரும் என்று நாம் கருதுகிறோம், ஆகவேதான் எதிர்க்கிறோம்.

மேலும் காங்கிரஸ்காரர்களெல்லாம் இந்தியை ஆதரிக்கிறார்கள் என்பதும் உண்மையல்ல. தேசியத் தமிழர்களில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர், இந்திக் கட்டாயத்தை பலமாக எதிர்க்கின்றனர். பிரசண்ட விகடன், தமிழ் மணி போன்ற ஏடுகள் இந்தி நுழைவைக் கண்டித்து காரசாரமான கட்டுரைகள் தீட்டியுள்ளன. ஆகவே, இந்தியை எதிர்ப்பவர்கள் எல்லாம் திராவிடக் கழகத்தவர் என்றும் ஆதரிப்பவர்கள் எல்லாம் காங்கிரஸ் தோழர்கள் என்றும் முடிவு கட்டுவது பெருந் தவறு.

நாம் இந்தியை எதிர்க்கிறோம்—ஏன்? முதல்வர் ஓமாந்தூராரின் நேர்மையிலும் நன்னடத்தையிலும் நமக்கிருக்கும் நல்லெண்ணமும் பற்றுணர்ச்சியும் அவரை எதிர்க்கக் கூடாது என்ற எண்ணத்தை நம் உள்ளத்தில் எழுப்பினாலும், இந்த இந்திப் பிரச்சினை, எது எப்படியானாலும் சரியே, இந்தியை எதிர்த்தே தீரவேண்டும் என்ற திடசித்தத்தை நமக்குத் தருவதோடு நாட்டிலே பெருங் கொந்தளிப்பையும் உண்டுபண்ணி இருக்கிறது—எதனால்?

ஏன் இந்தி என்றதும் இவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகிறது? என்ன காரணம்?

இதோ காரணங்கள்:—

இந்தியை எதிர்ப்பதற்கான காரணங்களை, சுருக்கமாகக் கூற வேண்டுமானால், பத்து வகையாகப் பிரித்துக் கூறலாம்.

1. மொழி ஒரு கருவி. நாம் நினைப்பதை பிறர்க்கு அறிவிக்கவும், பிறர் நினைப்பை நாம் அறியவும் பயன்படும் ஓர் கருவி. நம் கருத்துகளை இக்காலத்தில் ஒருவர்க்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், இறந்தகால மக்களின் கருத்துகளை நாம் உணரவும் நம் எண்ணங்களை எதிர்கால சந்ததியினருக்கு அறிவிக்கவும் மொழி தான் பயன்படுகிறது. துணியை அளக்க முழக்கோல் இருப்பது போல, பாலை அளக்க 'ஆழாக்கு' இருப்பதுபோல, பணத்தை அளக்க ரூபா இருப்பதுபோல, நம் கருத்து
களை அளக்கவும், அளப்பதே
டின்றி பரிமாறவும் மொழி பய
படுகிறது. ஆகவே நாம் மொ
யைப் பயில்வது மொழிக்காகவே
அல்ல! மொழியைக்கொண்டு கரு
துகளை அறிய, பயில, பரிமா
சேமித்துவைக்க! எனவே மொழி
பயிற்சியை கூடிய விரைவி
முடித்துக்கொண்டு, கருத்
வளர்ச்சியில் தான் நாம் அதிக க
னம் செலுத்தவேண்டும். அ
தான் முறை. இப்படியின்றி, ஒ
மாணவன், மொழிகளைப் பயில்வ
லேயே, புதுப்புது மொழிகளை
தெரிந்துகொள்வதிலேயே, த
காலம் முழுவதையும் செலவழித்
விட்டால் அவன் அறிவு வளர்வ
எப்போது? கருத்து வளர்ச்சியி
அவன் கருத்திருத்துவது எ
போது? முழம் இத்தகைய
என்று கற்றுக்கொள்வதிலும், மீட
இத்தகையது என்று தெரிந்
கொள்வதிலும், அங்குலம் இவ்வள
என்று அறிந்துகொள்வதிலு
ஒருவன் நேரம் முழுவதையும் செ
விட்டால் அவன் அளப்பது எ
போது? இந்தக் காரணத்தா
தான், நாம், தமிழ், இந்தி, ஆங்
லம் என்று வரிசை வரிசையாக
பல மொழிகளை மாணவன் பயி
வதைவிட தாய் மொழியாகிய த
மிழிலும் உலகமொழியாகிய ஆங்
லத்திலும் நல்ல பயிற்சி பெற்
போதும். பிறகு அவன் கவன
முழுவதும் புதுப் புது செய்திகளை
அறிவதிலும் உலகத்தைப் படி
த்தறிவதிலுமே செல்லட்டும் என்
கூறுகிறோம். தமிழ், தாய்மொழி
தமிழனுக்குத் தமிழ் பயில்வ
தான் எளிது. இயற்கை முறை
கும் ஒத்தது. அதோடு தமிழ் உ
கத்தில் உள்ள மிகச் சிறந்த மொ
களில் ஒன்று. ஆங்கிலம், உல
மொழி என்ற உயர்ந்த நிலையை
பெற்றிருப்பது. உலக மன்ற
தில் வழங்குவது. விஞ்ஞான
முதலான புத்தம் புதிய கலைக
அத்தனையும் தன்னிடம் கொ
டது. இந்த இரண்டு மொழிக
லும் இல்லாத கலையோ இல
கியமோ அறிவுச் செல்வமே
வேறு மொழிகளில் இரா
எனவே இந்த இரு மொழிகளை
பயில்வதே போதும். இத
மேலும் ஒரு மொழியைப் பயி
படி மாணவர்களைக் கட்டாய
படுத்துவது குழந்தை உள்ளத்தி
மீது தாங்க முடியாத சுமையை

ஈரோட்டுப் பாதை

★

மா. இளஞ்செழியன்
தீட்டியது

★

சுயமரியாதை இயக்கம் வளர்ந்த விதத்தைச் சுவை படச் சித்தரிக்கும் சிறு நூல்.

★

சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. வேண்டுவோர் உடனே தெரிவிக்க.

விலை 0 8 0 தபாலில் 0 9 0

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு,
சென்னை.

க்கி வைக்கும் அறிவீனச் செயலே தவிர வேறில்லை. மூன்று மொழிகளைப் பயிலும்படி இளம் மாணவர்களைக் கட்டாயப்படுத்து தை கல்வி நிபுணர் எவரும் ஒப்ப மாட்டார்கள். அதிலும் நம் சர்க் கார், இந்தியை முதல் பாரம் முதல் ஆறும் பாரம் வரை நுழைத்துள் ளார்கள். முதல் பாரம் படிக்கும் மாணவனின் சராசரி வயது 10 இருக்கும். **பத்து வயது குழந்தைச் சிறுவனையா மூன்று மொழிகளைப் படித்துத் தீரவேண்டும் என்று கட்டா யப்படுத்துவது? மனிதப் பண்பா து?** இப்போதே ஏராளமான பாடங்கள் என்ற பெருஞ் சுமை யைத் தாங்கமாட்டாமல் கழுத்து வலி கொண்டு தலை நசுக்குண்டு னம் வெம்பி வதையும் பத்து வயதுச் சிறுவன் தலைமீது இனிப் புதிதாக இந்தி என்ற பாறைக் கல்லையும் தூக்கி வைத்தால், அவன் தலை தாங்குமா? தாங்கும் என்று நல்ல இருதயம் கூறுமா? இந்தி வேண்டும் என்பவர்கள் சிந்திக்கட்டும்.

2. இப்போதே 10 வயது மாண வன் 5½ அல்லது 6 மணி நேரம் பள்ளிக்கூடம் என்ற சிறையில் நாள் தோறும் கிடத்தப்படுகிறான். இனி, இந்தியையும் நுழைப்பதா ல், அதற்கு நேரம் ஏது? ஒன்று, இந்திக்காக 6 மணி நேரத்துக்கு மேலும் அவனுக்குச் சராசரி மணி நேரம் அதிகப்படியாகக் கல்வி போதிக்கப்பட வேண்டும். அதாவது அவனுடைய "சிறை வாழ்க்கைக்" காலம் அதிகரிக்கப் படவேண்டும். அல்லது இப்போது வேறு பாடங்களுக்குத் தரப்பட் டுள்ள நேரத்தில் ஒரு பகுதியை வெட்டிப் பறித்து 'இந்தி' க்குத் தானமிட வேண்டும்! முன்னது முருகத்தனம்; பின்னது மடமைத் தனம். இந்தியை 10 வயதுச் சிறுவனின் கல்வியில் நுழைத்திட வேண்டுமானால் இந்த இரண்டில் ஒன்றைச் செய்தாகவேண்டும். செய்யலாமா?

3. இந்தியை கற்பதால் பயனில்லை. இந்தி இலக்கிய வளம் இல்லாதது. இலக்கணம் அற்றது. துளசிதாஸ் ராமாயணமும் இந்தக் கால நாவல்களும் தவிர வேறு கலைச் செல்வம் மருந்துக்கும் இல்லா து, 700 ஆண்டுகட்கு முன்தான்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்றுக் கவனி! இரகசியச் சொல்!

[பாரதிதாசன்]

ஏடா தூதா இங்குவா தனியே!
என்உதடு நின்செவி இரண்டையும் ஒன்றுசேர்!
இரகசியச் சொல் இயம்புகின்றேன்!
உற்றுக் கவனி! உயர்ந்த விஷயம்!
தமிழரின் வாழ்வடா! தமிழடா! செவிகொடு!

* * *

"இறந்தது வடமொழி!"—என்று தமிழர்
இயம்பி வந்ததுண்டா இல்லையா?
இறந்தது மெய்தான்! எனினுந் தமிழர்
இப்படிச் சொன்னதுண்டா? ஆமாம்!
மெய்யை எதற்கு விளம்பினர் தமிழர்?
வடமொழி யிறந்ததென்றதாற் றமிழை
மாய்த்திட வந்தனர் வடமொழிக் குரியவர்!

* * *

வீணை ஒலிக் கெதிர் வேண்டா அழுகைபோல்
கருங்குயில் மொழிக் கெதிர் கழுதை கத்தல்போல்
நங்கையர் மொழிக் கெதிர் நரியின் ஊளைபோல்
இன்தமிழ்ப் பயிற்சிக் கெதிரில் அவதி
இந்தியைக் கொணர்ந்தார்; இன்தமிழ் நலியும்!

* * *

"வடமொழி இறந்ததால் வடமொழிக் குரியார்
தமிழையும் அழிக்கச் சந்ததம் முயன்றார்!"
என்ற சேதியை இங்கிருந் தோடி
எனது பெரியார், இன்னுயிரனையார்,
தமிழின் தலைவர், தமிழ வீரர்,
இப்புவி மாயம் எழிலின் கூட்டம்
ஒப்புறக் காட்டும் உயர்தமிழ்க் கவிஞர்,
இன்தமிழ் மாணவர், இளஞ் சிங்கங்கள்,
இன்னவரிடமெலாம் இயம்புவாய் விரைவில்!
அவரிடம் இதைநீ அறைந்தாய் என்பதை
இங்கிருந் தேநான் தமிழர்
அங்கங் கொதித்தெழும் ஆர்ப்பால் அறிவேனே!

போர்வாள்

3—7—48 சனிக்கிழமை

"இந்தி வந்துவிட்டது! இனி என்ன? ஒரு கை பார்க்கவேண்டியதுதான்!"

அன்றோர் நாள், தன்னைச் சூழ்ந்து நின்ற ஆயிரமாயிரம் இளங்காளைகளைப் பார்த்து இந்த வாசகங்களை வீசினார் **பெரியார்**. விளைவு, வரலாறு கண்டறியாததோர் மொழிப் போராட்டம்! அவர் இந்த வாசகங்களை வீசியபோது, அன்றைய ஆளவந்தார்கள் எண்ணினார்கள் இந்த வாசகங்கள் வெறும் வாசகங்கள்தான் என்று! ஆனால் விரைவில் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது, இவை வெறும் வாசகங்கள் அல்ல, போர்த் தலைவர் தன் படை வீரர்களுக்குப் பிறப்பித்துள்ள கண்டிப்பான உத்திரவு என்பது! அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே தமிழர் பட்டாளம் திடீர் திடீரென வளர்ந்தது. எங்கெங்கிருந்தெல்லாமோ புதுப் புது சேனைகள் அணி அணியாக வந்து பெரியார் பெரும்படையுடன் 'சங்கமம்' ஆயின. தம்மை வாழ்விக்க வந்த தலைவர்பிரானின் எழுச்சிக் குரல் கேட்டதும் தமிழ் மறவர் கூட்டம் திரள் திரளாக வந்தது. இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது என்று இன்னிசை பாடிய வண்ணம் தமிழ்ப் புலவர் குழுவினர் மகிழ்ந்தோடி வந்தனர். எங்கள் தமிழுக்கா ஆபத்து—தொல்காப்பியத்தை, புறநானூற்றை, நற்றிணையை, நல்ல குறுந்தொகையை, ஐங்குறுநூற்றை, பதிற்றுப்பத்தை, பரிபாடலை, பற்பல அழகிய இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்ட உயர்தனிச் செந்தமிழ்ச் செம்மொழிக்கா ஆபத்து-சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த மாத்தமிழுக்கா ஆபத்து என்று கண்களில் தீப்பொறி பறக்க, உதடுகள் துடிக்க, திண்தோள் தினவெடுக்க, பொறுக்க முடியாத உணர்ச்சியால் உந்தப்பட்டு உள்ளத்தினுள்ளிருந்து கோபாவேச மொழிகள் உருண்டோடி வர, இளந்தமிழர் அணிவகுப்புகள் படபடவென, ஒன்றன்பின் ஒன்றாக, ஓயாமல் ஒழியாமல், வந்தவண்ணமிருந்தன. பசைப் பசுங் கிள்ளைகளை இடுப்பில் ஏந்திக்கொண்டு, அந்த இளங் குழந்தைகட்கு இன்மொழி கூறிக்கொண்டு, அதே நேரத்தில் எம்மை ஈன்றெடுத்த முத்தம்மையே நீ வாழ்க என்று பொன்மொழி பேசிக்கொண்டு, நம் தலைவர் பெரியார் எங்கே, அந்த வெண்தாடி வேந்தரின் படை வரிசை எங்கே, அந்த மாவீரர், தம் படைவீரர் சூழ நின்று ஆணை பிறப்பிக்கும் அரிய இடம் எங்கே எங்கே என்று தேடிக்கொண்டு, தமிழையா அழிக்க வந்தார் பகைவர், அவர் திறம் அழிக்கும் வரை யாம் உறங்க மாட்டோம்-எங்கள் இல்லம் நோக்கித் திரும்பிச் செல்லவும் மாட்டோம் மாட்டோம் என்று சூளுரைத்துக் கொண்டு, ஒரு வானில் பன்னிலவென உயர்தமிழப் பெண்களெலாம் களம்நோக்கி வந்தனர். காளைகள் மட்டுமா அல்ல கிழவர்களும் வந்தனர், சடங்கு சம்பிரதாயம் எனும் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தரை மட்டமாக்கிடும் சுயமரியாதை டார்ப்பிடோக்கள் மட்டுமா, இல்லை, பழமைக்குப் பக்க வாத்தியம் வாசித்துவந்த பண்டிதர் குழாமும் வந்தது. தோழர்கள் மட்டுமா, இல்லை, தோகைமயில்களும் வந்தன. ஆசிரியர்கள் மட்டுமா, அல்ல அல்ல, அவர்களை முன்னே 'துரத்திய' வண்ணம். மாணவ மணிகளும் நிரல் நிரலே வந்தனர். தளபதிகள் ஓர் புறம், அருமைத் தொண்டர்கள் மற்றோர் புறம், மங்கையர் ஓர் புறம், அவர்தம் கணவன்மார் வேறோர் புறம், குழந்தைகள் ஓர் புறம், அவர்தமைப் பெற்று வளர்த்த தந்தைமார் இன்னோர் புறம், வாழிய செந்தமிழ் எனும் குரல் ஓர் மருங்கு, வீழ்க நமை வீழ்த்தவந்த கொடுமொழி எனும் சொல் மற்றோர் மருங்கு, எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும் என்ற கேள்வி சிலர் உதடுகளிலிருந்து, அறபம் என[illegible]போம் அந்த இந்திதனை, அதன் ஆதிக்கம்தன்னைப் புதைத்திடுவோம் என்ற பதில் சிலர் உள்ளத்தினின்று! எங்கும் தமிழுணர்ச்சி! எங்கும் தமிழ் ஆர்வம்! எங்கணும் உற்சாகம்! எவ்விடத்தும் கடலலையெனப் பொங்கியெழும் பேராரவாரம் தமிழ் தமிழ் எனும் பேச்சே எங்கும்! தமிழர் தமிழா எனும் சொல்மாரியே யாண்டும்! பெரியார் பெரியார் என்ற முத்தமிழ் முழக்கமே எவ்விடத்தும்! பார்க்கும் இடமெல்லாம் தமிழ் இனை

கொழுந்துகள்! பார்வை செல்லும் இடம் எல்லாம் "ஒழிக இந்தி" பெரு முழக்கம்! தலை திரும்பும் பக்கமெல்லாம் மக்கள்! தமிழ் மக்கள்! திராவிட நல் திருநாட்டுச் சேய்கள்! அந்த மக்கட் கடல் நடுவே சிங்க ஏறுபோல் நின்றார் பெரியார். அவர் கரத்தில் வாள் இல்லை, துப்பாக்கி இல்லை, வெடிகுண்டு இல்லை, ஏதுமில்லை. வெறும் கரம்தான் அது. ஆனால் அந்தக் கரம் தமிழர்களைத் தட்டி எழுப்பிய கரம், பொய்யை புளுகை புராணத்தை ஒழித்துக் கட்டிட வழிகளை வகைகளை வகுத்துத் தந்த கரம், புத்துலகப் பாதையை தமிழகத்திற்கு முதன் முதல் சுட்டிக் காட்டிய கரம், "பழமையே, பாசி பிடித்த மனப்பான்மையே, பத்தாம் பசலிக் கருத்துகளே, வைதீகமே, கிழிந்த பழம் பஞ்சாங்கமே, போ வெளியே! போ! போ! போய்விடு" என்று வர்ணாசிரமம் எனும் மாற்றுப் பெயர் கொண்ட பார்ப்பனீயத்திற்கு மரணபுரியைக் காட்டிவிட்ட கரம், ஆகவேதான் அந்தக் கரத்திலே வேலோ வில்லோ வாளோ குண்டோ இல்லை எனினும் வீரம் உண்டு, வீர புருஷர்களை உருவாக்கும் விவேகம் உண்டு, விவேகிகள் எனப் பெயர் படைத்த வித்தகர்கள் பலர் சாதிக்காத காரியத்தைச் சாதித்த திறமை உண்டு என்பதை அறிந்த தமிழகம் அந்தக் கரம் காட்டிய வழியிலே கண்ணை மூடிக்கொண்டு செல்லத் துணிந்தது. அவர் சுட்டு விரல் அசைந்த திசையிலே தமிழ்நாடு அசையலுற்றது. அதே நேரத்தில் அன்பர் ஆச்சாரியார் 'கண்ணன் காட்டிய வழி'யை கரத்திலே ஏந்திக்கொண்டு குட்டிக் கதைகள் எனும் கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு, ஒரு காதை கேளாக்காதென ஆக்கிக்கொண்டு, வேகமாக வளர்ந்துவரும் தமிழர் முன்னணி புகட்டிடும் பாடத்தை உணராது, சிறைச்சாலைகளையும் செந்தலைகளின் எண்ணிக்கையையுமே என்றும் சதம் என எண்ணிக்கொண்டு தூற்றல் அகராதியைத் துருவித் துருவிப் பார்த்து வசைமொழிகளை வியாக்யானக் குளிகைகளாக்கித் தந்துகொண்டிருந்தார், நாட்டுக்கு! அல்ல! அவர் அடி தொழுதிடும் அடியவர் கூட்டத்திற்கு!

செந்தமிழர் கூட்டம் 'வாழிய நம் தமிழ்' என ஒலித்த ஞான்று, அவர் சிறைக் கோட்டத்தைக் காட்டினார், முகத்தில் குறும்புப் புன்னகையுடன்! சிறை தானே, அது எம் சிந்தையைச் சிதைக்காதே என்றனர் தமிழர். "அப்படியா! பிடித்தடைத்தேன் சிறையில் உம் பெரியாரை" என்றார் அவர். பெரியார் ஒருவரல்லவே இந்நாள்! இலட்சக் கணக்கான பெரியார்களை உற்பத்தி செய்து விட்டாரே எம் பெரியார் என்றது தமிழகம். மங்கையரை சிறை வைப்பேன் என்றார் அவர். ஆகா! அதற்கென்ன என்றனர் தமிழர். கையிற் கிடைத்த ஆயுதம் ஒவ்வொன்றையும் எடுத்தெடுத்து வீசிவந்தார் ஆச்சாரியார், இறுதியில் சோர்ந்தார், வீழ்ந்தார், வென்றனர் தமிழர் புன்முறுவல் பூத்த முகத்துடனே பெரியார், அடுத்த பணி சமுதாய இழிவு நீக்கப் போராட்டம் என்று கூறலானார், வெற்றிக் களிப்பை அநுபவிக்கக்கூட 'ஓய்வு' கொள்ளாமல்!

இந்தி வந்துவிட்டது! இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியதுதான்! — 8-5-38ல் பெரியார் கூறிய இவ்வாசகம் தமிழகத்தில் மூன்று ஆண்டுகள், பெரியதோர் போராட்டத்தை எழுப்பிவிட்டது. இறுதியில் வெற்றியை தமிழர் காலடியில் கொண்டு சேர்த்தது. 8-5-38ல் கூறிய அதே வாசகத்தைத்தான், **அதே பெரியார்**, 24-6-48ல் திருச்சியில் நிர்வாகக்கமிட்டி கூட்டத்தை ஒட்டி நடந்த பொதுக்கூட்டத்தில் கூறி இருக்கிறார். **அதே பெரியார்** என்றா சொன்னோம்? தவறு! அன்று இருந்த பெரியார் வேறு! இன்று இருப்பவர் வேறு! அவர் 60 ஆண்டுக் கிழவனார். இவர் 70 ஆண்டுக் காளை! அவரைவிட இவர் 10 ஆண்டு இளையவர், உணர்ச்சியில்! எழுச்சியில்! ஊக்கத்தில்! உற்சாகத்தில்! தமிழ் வாழ்வில் தணல் சேர்க்கும் தன்மையில்! ஓயாத உழைப்பில்! உடைபடாத உறுதியில்! ஆம்! இன்று, பெரியார், முன்னைவிட பலமடங்கு வலுவுடனும் பக்க பலத்துடனும் படைத் திறத்துடனும் நிற்கிறார். அன்றைய ஆட்சி மூன்று ஆண்டுகளில் சாய்ந்தது. இன்றைய ஆட்சி மூன்றே மாதங்களில் பெரியாரிடம் வந்து பணிந்தால் அதில் வியப்பதற்கு ஏதும் இராது. அப்படியொன்றும் அவினாசியார் ஆச்சாரியாரைவிட சூழ்ச்சித் திறத்தில் 'கைவந்த கலைஞர்' அல்ல, அதிக நாள் தாக்குப் பிடிக்க!

என்ன நடப்பினும் நடக்கட்டும், எது வரினும் வரட்டும், கட்டாய இந்தியை எதிர்த்தே தீருவேன், அதனை ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் அடங்குவேன் என்று கூறினார் பெரியார் அன்று! பொறுமையின் கடைசி எல்லைக் கோடு எதுவரைக்கும் உண்டோ அது வரை அமைதி காத்திருக்கிறார் பெரியார். கட்சித் தொண்டர்கள் சிலர் உள்ளத்திலேயே கூட "என்செய்வது போர் தொடங்கவில்லையே பெரியார்" என்று சலிப்புச் சிந்து தோன்றிடும் அளவுக்குப் பொறுத்திருக்கிறார். இனியும் பொறுப்பார் என்று எதிர் பார்ப்பது பேதமை. ஓமந்தூரார் சர்க்கார் ஆயிற்றே, நம் இனத்தவர்கள் ஆளும் நிலைமை ஆயிற்றே, அவர்கட்கு 'சங்கடம்' தருவது கூடாதே என்று பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தார் பெரியார், ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? அமைச்சர் அவினாசியாரின் செயல் பெரியாரின் புனிதமான உள்ளத்தையும் புண்படுத்திவிட்டது; "பொறுங்கள் பொறுங்கள்! நம்மவர்கள்தானே! கொஞ்சம் இருங்கள்! இருங்கள்!" என்று காளைகளின் துடிதுடிப்புக்கெல்லாம் விடை கூறிவந்த பெரியாரையே "பொறுத்தது போதும்—போர் தொடுப்போம் இனி" என்று கூறச் செய்துவிட்டது. பின் என்ன? வேறு ஆபத்துகள் ஆயிரம் நமை நோக்கி வந்தாலும் பொறுக்கலாம், நம் உயிருக்குயிரான அருமைத் தமிழுக்கு ஆபத்து என்றால் யார்தான் அதைப் பொறுக்க முடியும்? பொறுத்துக்கொண்டு, எப்படித்தான் நம் தாய்த் திருநாடுதன்னில் உலவ முடியும்? உலகினில் நாமும் மனிதரென வேறினத்தார் எப்படி ஒப்புக்கொள்வார்? தமிழ் எனில் அது நம் உயிர்ப்பொருள்.

அதற்கு ஆபத்து எனில் நாம் சும்மா இருப்பதா? வேற்று நாட்டு இந்தி நம் இனிய தமிழுக்கு உரிய இடத்தைத் தட்டிப் பறிக்க வரக் கண்டும் நாம் வறிதே கிடப்பதா? இல்லை! முடியாது! பொறுக்க முடியாது! நேற்றே முன் தினமோ தோன்றிய ஓர் கலவைச் சிறு மொழி முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழைய நம் செந்தமிழை வீழ்த்திட வருவதை நாம் பொறுக்க முடியாது! ஓர் தாளமுத்தை, ஓர் நடராசனைப் பலிபீடத்தில் சாய்த்த அந்தப் பொல்லாத கட்டாய இந்தி மீண்டும் தமிழகத்தில் பவனி வருவதை நாம் பொறுக்க முடியாது! 1166 காளைகளை வெஞ்சிறையிலிட்டு வாட்டி வதைத்த அந்தக் காட்டு மொழி அதை மறந்துவிட்டதுபோல் பாவனை மந்திரம் பலபட உரைத்த வண்ணம் இங்கு உலவ வருவதை நாம் பொறுக்க முடியாது! நம் அன்னைமார் 73 பேர் குழந்தைகள் 32 பேர் ஆக இவர்களையும் கூட ஈவு இரக்கமின்றி சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தச் செய்த அந்த வடநாட்டு வம்பர் மொழிக்கு 20 லட்சம் ரூபா நம் பணத்தினின்று வாரி இறைக்கப்படுவதை நாம் பொறுக்க முடியாது! "அறுபதாண்டுங் கடந்த முதுபெருந் தலைவராயிற்றே! புதிய தமிழகத்தின் நிர்மாண கர்த்தாவாயிற்றே! உண்மைத் தமிழர் உள்ளத்தெல்லாம் தன் அன்பு முத்திரையைப் பொறித்துவிட்ட மாவீரராயிற்றே! உன்னையே நீ எண்ணிப் பாரு என்ற தாரக மந்திரத்தை தமிழருக்குத் தந்த சிந்தனைச் சிற்பியாயிற்றே" என்றுகூட எண்ணிப்பாராது, ஒரு சொட்டு கண்ணீரும் சிந்தாது, வாட்டமோ வருத்தமோ அணுவளவும் கொள்ளாது, உள்ளத்தில் ஈரம் என்பது எள்துணையும் இல்லாது நம் தலைவர் பெருந்தகைக்கு மூன்றாண்டு கடுங்காவல் எனும் கொடுந் தண்டனையை விதித்த அந்தக் கொடுமையிற் கொடிய, மிகக் கொடிய இந்தி இங்கு மறுபடியும் "ஏதும் அறியாத பச்சிளங் குழந்தை" போல வருவதை நாம் பொறுக்க முடியாது! ஊதியம்! ஊதியம்! உயிர் வாழ ஊதியம்! என்று நம் புலவர் பெருமக்கள் வாட வாட அதுபற்றிக் கவலையற்ற அமைச்சர் கூட்டம் இந்திப் பண்டிதர்க்குப் பயிற்சி தரபல்லாயிரம் ரூபாயைப் பாழுக்கு இறைப்பதை நாம் பொறுக்க முடியாது! "போய் மறைவாய் இந்தி என்று புகலுகின்றோம் இங்கே; நாம் புகலுகின்றோம் இங்கே! புக நினைத்தால் அழிவை என்று முழக்கிடுவோம் சங்கே!"

தமிழர்களே வாருங்கள், தோழர்களே வாருங்கள், அன்னையரே வாருங்கள், அருங் காளைகளே வாருங்கள், புலவர்களே வாருங்கள், மாணவ மணிகளே ஓடோடி வாருங்கள், வாணிகத்தலைவர்களே, அரசாங்க அலுவலரே, அருந் தமிழிற் பற்றுடைய இசைப் புலமைச் செல்வர்களே, நற்றமிழ் நடிகர்களே, வயதான பெரியோரே, வண்தமிழர் யாம் என்றுரை கூறும் தேசியத் தோழர்களே, வாருங்கள் வாருங்கள், எல்லோரும் வாருங்கள். ஆடவரானாலென்ன, பெண்டிரானாலென்ன, "இந்துக்கள்" ஆனாலென்ன, இஸ்லாமியர் ஆனால் என்ன, சைவத்திருவினர் ஆனால் என்ன, வைணவப் பற்றினர் ஆனாலென்ன, எந்த மதத்தவரானாலென்ன, எந்த சாதியினரானாலென்ன, சேர்ந்திருக்கும் கட்சியோ நின்றிருக்கும் முகாமோ அமைத்துள்ள கூடாரமோ எதுவானாலென்ன, எந்தக் கொடியுடையதானாலென்ன, எந்த இலட்சியச் சொல் உடையதானால்தானென்ன, அணிந்திருக்கும் சட்டை கருப்பானாலென்ன, சிகப்பானால்என்ன, கதர் ஆனால்தானென்ன, வந்திருக்கும் ஆபத்து தமிழுக்கு! நம் தாய் மொழிக்கு! வடக்கினில் தமிழர் வாழ்வை வதக்கிப் பின் தெற்கில் வந்தே இடக்கினைச் செய நினைத்த எதிரியை அந்நாள் தொட்டே அடக்கடா என்றுரைத்த அறங்காக்கும் நம் இன் மொழிக்கு! ஆபத்து, தமிழர் அனைவரையும்—ஏன், திராவிடர் அனைவரையும்—ஒரு சேரவந்து தழுவுகிறது. ஆகவே இவர் எமக்கு இனியர் இவர் இன்னார் என்பதின்றி, இவர் எம் நண்பர்—இவர் பகைவர்—இவர் நொதுமலர் என்பதின்றி, இவர் எம் கட்சியினர், அவரோ எதிர்க்கட்சித் தோழர் என்றெல்லாம் பாராது, எல்லோரும், எல்லாக் கட்சியினரும், எல்லா மதத்தினரும், எல்லா வகுப்பினரும், எத்தகைய கருத்து வேற்றுமைகள் படைத்தவரும் **இந்தி எதிர்ப்புப் பட்டாளம்** என்ற முனையில் வந்து கூடுங்கள். வாருங்கள், வாருங்கள், விரைந்தோடி வாருங்கள். கட்டாய இந்தி எனும் துட்டத்தனம் நிறைந்த பாழும் திட்டத்தை வெட்டி வீழ்த்த வாருங்கள்! இப்புவி தோன்றிய நாள் முதலாய் எங்கள் இன்பத் தமிழ்மொழி உண்டு கண்டீர், தப்பிழைத்தார் இங்கு வாழ்ந்ததில்லை, இந்தத் தாந்தோன்றிகட்கு என்ன ஆணவமோ என்று கவிபாட வாருங்கள்! இந்தியினைத் தமிழரிடம் ஏன் புகுத்த வேண்டும்—இவர் ஏன் புகுத்த வேண்டும்—எம் உயிரில் நஞ்சுதனை ஏன் கலக்க வேண்டும் என்று கேட்க வாருங்கள்! அஞ்சுவது யாதொன்றுமில்லை, இனி அஞ்ச வருவதுமில்லை, செந்தமிழைக் காப்பதற்கு அச்சம் அணுவும் இல்லை என்று அண்டம் அதிரத் தமிழ் முழக்கம் செய்ய வாருங்கள்! தமிழ் எனில் வீரம் எனப் பொருள்—அந்தத் தமிழ் பயிலும் தமிழர் எனில் மாவீரர் எனப் பொருள் என்பதை ஆளவந்த அன்பர்கட்கு அறிவிக்க வாருங்கள்! அன்பர் ஆச்சாரியார் அன்று கற்ற பாடத்தை இன்றைய ஆளவந்தார்கட்குப் படித்துக் காட்ட வாருங்கள்! உற்றாரை உறவினரை நண்பர்களை பகைவர்களை அனைவரையும் அணைத்துக் கொண்டு திரள் திரளாய்த் திரண்டு வாருங்கள்! செந்தமிழர் கூட்டம் திரண்டது, புரட்சித் தலைவர் **பெரியார்** பக்கம் நின்றது, அவர் குறித்த திசை நோக்கிச் செல்லத் துணிந்தது என்று தெரிந்தாலே போதும், இந்தி வந்த வழிபார்த்து வந்ததைவிட வேகமாகத் திரும்பிவிடும்.

தமிழர்களே! வாருங்கள்! வந்து அணிவகுப்பில் கலந்து நில்லுங்கள்! **இந்தி ஒழிக** என ஓங்கி முழங்குங்கள்! அதை முழக்கத் தெரியாத ஆளவந்த குழுவினர்க்கு நல்வழி இதுவெனக் காட்டுங்கள்! அடக்குமுறை ஈட்டிகள் ஆயிரம் ஆயிரம் வரும். அத்தனைக்கும் "தயார்" கூறுங்கள்.

இந்தி வந்துவிட்டது! இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியதுதான்! —பெரியார் கூறிய அந்த வாசகத்தைத் திருப்பித் திருப்பிப் படியுங்கள்! உற்சாகத்தின் உறைவிடம் ஆவீர்கள். உணர்ச்சியின் உருவங்கள் ஆவீர்கள். அஞ்சுதல் அறியா அடலேறுகளாவீர்கள். எழுச்சிக்கோர் எடுத்துக் காட்டு எனப் பொலிவீர்கள்.

படியுங்கள்! படித்துவிட்டு தமிழகத்தைத் திரும்பிப் பாருங்கள்! புயல் வீசக் காண்பீர்கள்! தமிழ் வெல்வதைக் காண்பீர்கள்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றி இன்னும் வளராமல் இருக்கும் ஓர் புதிய கலவை மொழி இந்தி. இதனைத் தமிழர் ஏற்பதால் தமிழுக்கு எத்தகைய ஆக்கமும் கிடையாது. எப்படி இருக்கும்? தாமரை மலர் மீது இரண்டொரு சாக்கடைத் தண்ணீர் சொட்டுகளைத் தெளித்தால் தாமரை மலருக்கு என்ன நன்மை இருக்கும்? இருக்குமா? குறைந்தது 10,000 ஆண்டுகளாகவளர்ந்து சிறந்த பண்பும் தெளிவும் ஆழமும் அழகும் செம்மையும் படைத்திருக்கும தமிழுக்கு நேற்றுத் தோன்றிய, வளம் சிறிதும் அற்ற இந்தி என்ன நன்மை தரும்? தொல்காப்பியம் திருக்குறள் புறநானூறு பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் போன்ற விழுமிய நூற்கள் ஒன்று கூட இல்லையே இந்தியில்! திருக்குறளில் உள்ள ஒரு குறளுக்கு இந்தி முழுவதும் ஈடாகாதே! ஈடாகும் என்று எவரும் கூறத் துணியாரே! இந் நிலையில் தமிழகத்தில் இந்தி ஏதுக்கு? இந்தி பேசுபவர்கள் தமிழ் கற்ருல் அவர்களுக்கு நிரம்பப் பலன் உண்டு. அவர்கள் தமிழ் கற்பதுதான் நியாயமுங்கூட. பணம் உடையவன்தானே ஏழைக்கு நன்கொடை தர முடியும்? அதுபோல தமிழ்தானே இந்திக்கு வளம் தர முடியும்.

4. இந்தியால் தமிழ் கெடும்: இதற்கு வாதம் தேவையில்லை. வடமொழியால் தமிழ் கெட்டது. தமிழர்தம் உயர்ந்த பண்பாடும், சாதி பேதமற்ற மனப்போக்கும், ஒன்றே தேவன் என்ற எண்ணமும், சங்க காலத் தூயவாழ்க்கையும் அழிந்து, புராண இதிகாச மனப்பான்மையும் ஆயிரம் உண்டிங்கு சாதி என்ற நிலைமையும் பல்லாயிரம் தேவர்களை வழிபடும் பொல்லாங்கும் ஏற்பட்டது வடமொழிச் சேர்க்கையின் தீய விளைவுதானே! இந்தியின் சேர்க்கையும் துளசிதாஸ் இராமாயண மனப் பான்மையைத்தானே நமக்குத் தரும்? அதோடு தமிழில் ஏராளமான இந்திச் சொற்கள் இறக்குமதியாகத்தானே அச் சேர்க்கை பயன்படும்? வடமொழிச் சேர்க்கையால் தமிழின் அழகு குறைந்ததுபோல இந்திச் சொற்களாலும் குறையத்தானே செய்யும்? நாமே விலை கொடுத்து இந்தச் சனியனை விலைக்கு வாங்குவானேன்?

5. இந்தி கற்ருல் வடநாட்டில் உத்தியோகம் கிடைக்கும்; ஆகவே இந்திப் பயிற்சி நல்லது என்கின்றனர் சிலர். எவ்வளவு பெரும் பொய்! பத்தாவது வரையில் பள்ளியில் 'ஏனே தானே' நிலையில் படிக்கும் இந்திப் பயிற்சிக்கா வடநாட்டில் உத்தியோகம் கிடைக்கும்? அதுவும் இந்தி பயிலும் இந்த இலட்சக்கணக்கான மாணவர்க்ட்குமா? டில்லியில் பதவியில் இருக்கும் ஒரு சில தென்னிந்தியர்களையும் துரத்தவேண்டும் என்று அங்கு இயக்கம் இருக்கிறதாமே, அவர்களா நம் இலட்சக்கணக்காண மக்களுக்கு ஏதோ கொஞ்சம் இந்தி தெரிந்த காரணத்திற்காக உத்தியோகங்களை அள்ளி வழங்குவார்கள்? அவ்வளவு ஏமாளிகளா அவர்கள்? பிர்லாக்களும் கொயங்காக்களும் டால்மியாக்களும் பிறந்த இனமாச்சே அது! அதுவா அவ்வளவு எளிதில் ஏமாறும்? நடக்கிற காரியமா இது?

6. இந்தி தெரிந்திருத்தால் வடநாட்டுக்குச் சென்று வாணிபம் செய்ய முடியும் என்கின்றனர் சிலர். கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தத்திற்கு வழி காட்டுவான் என்பதுபோ லல்லவா இருக்கிறது இந்த வாதம்? தென்னட்டில் 'சுரண்டல் இயந்திரம்' அமைத்திருக்கும் வடநாட்டு வணிக வேந்தர்களை விரட்டி, நம் தென்னட்டு வணிகத்தைச் 'சிறைமீட்க' முடியாத நாமா வடநாடு சென்று வணிகம் செய்ய முடியும்? நம் நாட்டிலேயே நம்மை 'மட்டந் தட்டிவிட்ட' வடவன் தன் நாட்டிலேயா வாணிகப் பிடியை நம்மிடம் சிகக விடுவான்? செ! எவ்வளவு மட்டரகமான வாதம் இது!

வட நாட்டுக்கு நாம் சென்று வாணிபம் செய்ய முடியும் என்றே வைத்துக்கொண்டாலும் அதற்கு இந்தி தெரிந்துதான் ஆகவேண்டுமா? வட நாட்டு மார்வாடி இங்கு வந்து வட்டிக் கடை வைக்கிருனே வரும்போதே தமிழ் தெரிந்து கொண்டா வருகிருன்? இங்கு 'தினமணி' தினசரியை நடத்துகிருரே வட நாட்டு முதலாளி **கோயங்கா**, அவர் பள்ளிக்கூடத்தில் 10-வது வயதில் தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக கற்றுக் கொண்டா இங்கு வந்தார்? இல்லையே! இல்லையெனில் நாம் மட்டும் ஏன் எப்போதோ ஒரு காலத்தில் வடநாட்டுக்கு வணிகத்திற்காகச் செல்ல முடியும் என்பதற்காக இப்போதே இந்தியைக் கட்டாயமாகக் கற்றுத் தீரவேண்டும்?

அப்படியே, வாணிப நலனுக்காக இந்தி வேண்டும் என்றலும் வணிகம் செய்யப் போகிறவன் போகும் போது கற்றுக் கொள்ளட்டுமே எப்போதோ வணிகம் செய்யக் கூடிய யாரோ சிலருக்காக எல்லா மாணவர்களும் இப்போது இந்தி கற்றுத் தீரவேண்டும் என்பது என்ன நீதி?

7. இந்தியா முழுவதற்கும் ஒரு பொது மொழி இருக்க வேண்டும்; அதற்கு இந்திதான் ஏற்றது; ஆகவே நாம் இந்தி பயில வேண்டும்— இது நம் சர்க்காரின் வாதம்! இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுமொழிஇருக்துதான் ஆக வேண்டுமா? அதற்கு இந்திதான் ஏற்றதா? அதை நாம் பயில்வது அவசியம்தான—இவை, நம் கேள்விகள்!

இந்தியா ஒரு கண்டம், நாடல்ல! இதனை ஒரு நாடு என்று கொள்வத

(11-ம் பக்கம் பார்க்க)

எலலா ஊர்களிலும் முன் பணம் கட்டும் - விற்பனையாளர்கள் தேவை.

விரைவில் வெளிவருகிறது!
ஆண்டு சந்தா ரூ. 3.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பாசறைக், கூட்டங்கள் நிகழ்ந்தன. முன்னதன் 'பெயர் சென்னை மாநிலத் தமிழர் மாநாடு. பின்னது இந்தி எதிர்ப்பாளர் மாநாடு. அதற்கு, நாவலர் பாரதியார் தலைவர். இதற்கு சர். கே. வி. ரெட்டி நாயுடு தலைவர். இப் பாசறைக் கூட்டங்களில் ஆந்திர மலையாளியரும் பெரும் பங்கு கொண்டனர். "இந்தி வந்தால் போர் உறுதி" என்று 'அபாய அறிவிப்பு'க் காட்டின இம் மாநாடுகள்.

ஆச்சாரியார் அஞ்சினாரில்லை. நுழைத்தார் இந்தியை! 1938 ஏப்ரலில் இந்தி உத்தரவு பிறந்தது. 'மே' திங்களில், திருச்சியில், தமிழர் தலைவர்களும் படைத் தளபதிகளும் ஒன்று கூடி இந்திப் போருக்கான கொடி உயர்த்தினர். போர் முறைத் திட்டமும் வகுத்தனர். "சத்தியாக்கிரகம்—அதில் வெற்றி இல்லையேல் சட்டமறுப்பு" என்று எக்காளமிட்டது அம் மந்திராலோசனைக் கூட்டம். 'ஆம், அதுதான் சரி' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிற்று ஓர் குரல்—அது மக்கள் மன்றத்தின் எழுச்சி ஒலி.

கண்டார் ஆச்சாரியார். நெஞ்சங் கொதித்தார். 'இது தகுமோ?' என்று ஆர்ப்பரித்தார். சற்றேனும் பொருத்தமற்ற ஆர்ப்பாட்ட வேடம் பூண்டார். 'ஆள்வது நானா அல்லது என் நண்பர் இராமசாமி நாயக்கரா என்பதைத்தான் கண்டுவிட வேண்டும்' என்று கடுங்கோபத்தில் வார்த்தைகளை அனலெனவே வீசினார். 'இந்தி எதிர்ப்பாளர்கள் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் — அவர்களை எந்த ஆயுதமும் கொண்டு தாக்குவேன்' என்று உவமான உவமேய விளக்கம் கூறினார். நயமாகப் பேசிப் பார்த்தார் ஒரு நாள்; பலமாகத் தாக்கி எதிர்த்தார் மறுநாள்: 'அடக்கு முறைகள் ஆயிரம் உண்டு' என்று அச்சுறுத்தினார் மற்றொருநாள். ஒன்றுக்கும் அஞ்சவில்லை தமிழர்.

'வாழ்ந்தால் தமிழுடன் வாழ்வோம், இல்லையேல் மண்ணுடன் மண்ணாய் மறைவோம்' என்று சூளுரைத்தனர். "மங்கை ஒருத்தி தரும சுகமும் எங்கள் மாத் தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்; பஞ்சம் விளைத்திடில் தாய்மொழிக்கே உடல் பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்" என்று வெகுண்டெழுந்து கூவினர்.

அடுத்த திங்கள், சிறைச்சாலை கூவி அழைத்தது தமிழர்களை. ஓடோடிச் சென்றது தமிழர் கூட்டம்; சிறைக் கதவைத் தட்டிற்று; உள்ளே புகுந்தது; 'தமிழ் வாழ்க' என ஒலித்தது. அங்கேயும் மொழிப் போராட்டம்!

சிறை எனக் கேட்டு அஞ்சவில்லை தமிழர். தாய்மொழியைக் காப்பதற்கு ஏன் அஞ்சவேண்டும்? சென்றனர் தமிழர் சிறைக் கோட்டத்திற்கு. மேலும் மேலும் சென்றனர். சிறை நிரம்பி வழியுமளவு சென்றனர். ஒவ்வொரு நாளும் சென்றனர். இன்பத் தமிழை அழிக்கவந்த கட்டாய இந்தி தொலையும்வரை சென்றனர். இறுதியில் வென்றனர்.

அடக்குமுறை வலுத்தது. ஆட்சிப் பீடம் உறுமிற்று. தாக்குதல் கணைகள் அடுத்தடுத்துக் கிளம்பின. '144, ஊர்தோறும் நடமாடிற்று. பிரிவு 153 வந்து வந்து போயிற்று. '117 ஏ'—அதுவும் சளைக்கவில்லை. ஜாமீன்—சோதனை—பறிமுதல்—கடுங்காவல்—தலைவர்கட்கு வாய்ப்பூட்டு—கிரிமினல் திருத்தச் சட்டம், எதுவும் தவறவில்லை, தமிழரைத் தாக்க. ஆனால் போரோ அடங்கவில்லை. தமிழர் உள்ளக் கொதிப்போ தீரவில்லை. எப்படித் தீரும் வந்த இந்தி போகா முன்னர்?

26-9-38ல் சி. என். ஏ. சிறை புகுந்தார். அதற்கு முன் திங்கள் 'தமிழர் பெரும் படை' என்றோர் அமைப்பு, தோழர் அழகிரிசாமியின் தலைமையில் திருச்சித் தண்டு விட்டுக் கிளம்பி தமிழகம் முழுதும் வலம் வந்து, சென்னைக் களம் சேர்ந்தது. நவம்பரில் மங்கைமார் போர்முரசு கொட்டினர், சிறை வாசமும் தொடங்கினர். டிசம்பரில் தலைவர் பெரியாருக்கு மூன்றாண்டுக் கடுங்காவல் கிடைத்தது. தமிழர் தலைவருக்குக் கிடைத்த இக் கொடுந் தீர்ப்பின் தன்மை கண்டு தமிழகம் கொதிப்பேறிக் கிடந்த வேளை "நடராசன் தாளமுத்து" என்னும் இரு காளைகள்—தமிழ் காக்கச் சிறை சென்ற வீரர்கள் சிறையிலேயே மாண்ட கொடுஞ் சேதி புகுந்தது தமிழர் செவியில். கண்ணீர் விட்டுக் கலங்கினர் தமிழர், ஒரு கணம். புனல் சொரிந்த கண்களில் புரட்சிப் பொறி பறந்தது, மறு கணம். 'பலி பீடத்தில் தம் தலைவர் பெரியாரும் கிடத்தப் படுவரோ?' என்ற அச்சம் தமிழர் உள்ளத்தைப் பிடித்துக் குலுக்கிற்று. அதன் விளைவாய்த் தமிழ் நாட்டில் புரட்சிப் புயல் வீசிற்று. "ஆட்சிக் குழுவினரே! ஆளவந்தோரே! எம் தலைவர் பெருந்தகையை விடுவீர் விடுவீர்" என்ற பெரு முழக்கம் தமிழ் நாட்டையே அதிர்ந்தெழச் செய்தது. அதிர்ச்சியின் எதிரொலி, பெரியாரின் விடுதலை. 22-5-39ல் பெரியார், எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார். பிறகென்ன? 7-6-39 ல் சிறை சென்ற தோழரெல்லாம் விடுதலை ஆயினர். 27-10-39ல் ஆச்சாரியார் ஆட்சி கவிழ்ந்தது. நவம்பரில் 'புதிதாகப் பள்ளிகளில் இந்தி புகுத்துவதில்லை' என்ற முடிவுக்கு வந்தனர் ஆட்சியினர். பிப்ரவரியில் இந்திக் கட்டாயம் தொலைந்தது—வென்றது தமிழர் மாட்சி—வீழ்ந்தது பகையின் கூட்டம்.

* * *

இந்த இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழர் உள்ளத்தின் படப்பிடிப்பு; வருங்காலத் தமிழகத்திற்கோர் கலங்கரை விளக்கம்; திராவிடக் கூட்டாட்சியின் கால்கோள் விழா.

இந்த மொழிப் போராட்டத்தைத் தமிழர் என்றும் மறவார். தமிழர் மறந்தாலும் ஆரியம் மறவாது. ஆரியம் மறந்தாலும் வரலாறு மறவாது. தமிழ் நாட்டின் வரலாறு தனியாக எழுதப்படும்போது, இந்திப் போராட்டம் அதில் 'புத்தம் புதிய புறநானூறு' என்ற தலைப்பில் இடம் பெற்றே தீரும்.

—

புதியதோர் உலகு செய்வோம்!

★

திராவிடர் கழக இலட்சியங்களை விளக்கி நம் **தலைவர் பெரியார்** ஆற்றிய பேருரை. ஒவ்வொரு திராவிடரும் அவசியம் படிக்க வேண்டிய அருமையான சொற்பொழிவு.

★

விலை 6 அணா தபாலில் 0-7-0

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

னல் ஏற்படும் விபரீத விளைவுகளில் ஒன்று தான் இந்த பொது மொழிப் பிரச்சினை. இந்தியாவை ஒரு நாடு என்று கொள்வதால், அந்த நாட்டிற்கு ஒரு மொழி இருக்கவேண்டும் என்றும் அந்த மொழி இந்தி என்றும் ஏற்படுகிறது. ஆனல் உண்மையில் இந்தியா ஒரு நாடல்லவே! நாடல்ல, கண்டம் என்ருல் அதற்குப் பொது மொழி எப்படி இருக்கும்? ஐரோப்பா கண்டத்திற்குப் பொது மொழி இருக்கிறதா? ஆஸ்திரேலியா கண்டத்திற்குப் பொதுமொழி இருக்கிறதா? ஆப்ரிகா கண்டத்திற்கு இருக்கிறதா? இந்தியாவுக்கு மட்டும் எப்படி இருக்கும்?

இல்லை, இந்தியா ஒரு நாடுதான், கண்டமோ துணைக் கண்டமோ அல்ல என்று வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் ஒரு நாட்டிற்கு ஒரு பொது மொழி இருந்துதான் தீர வேண்டுமா? **கனடாவில்** பிரஞ்சு ஆங்கிலம் இரண்டு மொழி பேசும் மக்கள் இருப்பதால் இரு மொழிகளும் சர்க்கார் மொழிகளாக உள்ளனவே! **ஆப்பிரிக்காவில்** ஆங்கிலம், டச்சு இருமொழிகளும் ஆட்சி மொழிகளாகத் தானே இருக்கின்றன! இரண்டில் எதுவும் பொது மொழியாக்கப்படவில்லையே! **ஸ்விட்சர்லாந்தில்** ஜெர்மனி, இத்தாலி, பிரஞ்சு மூன்று மொழிகளும் சட்ட சபைகளிலும் வழங்குகின்றனவே! 100க்கு 71 பேர் ஜெர்மனி பேசுபவர்களாகவும் 100க்கு 23 பேர் பிரஞ்சு மொழி பேசுபவர்களாகவும் 100-க்கு 6 பேரே இத்தாலி பேசுபவர்களாகவும் இருந்துங்கூட அங்கு ஜெர்மனி பொது மொழியாகவில்லையே! இத்தாலி மொழி ஒதுக்கப்படவும் இல்லையே! 100க்கு 70 பேர் பேசும் ஜெர்மனிய மொழியே பொது மொழியாக ஆக்கப்படவில்லை என்ருல், 100க்கு 30 அல்லது 40 பேர்கூட பேசாத இந்தி இங்கு பொது மொழியாகவும் கட்டாயமாக ஆக்கப்படுவதா? இது நியாயமா?

சரி! இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று வைத்துக் கொண்டால் அதற்கு இந்தி தான் இருந்து தீரவேண்டுமா? வங்காளிகள் அசாமிகள் தென் இந்தியர்கள் — இவர்களெல்லாம் இந்தியை வெறுக்கின்றனரே விஷமென, இதற்கென்ன பரிகாரம்? இப்போது பொது மொழியாக இருக்கும் ஆங்கிலமே இனியும் பொது மொழியாக இருந்தால் என்ன நட்டம்? ஆங்கிலேயன் மீது இருந்த வெறுப்பு ஆங்கில மொழி மீதும் இருக்க வேண்டியது அவசியம் இல்லையே!

(8) வடநாட்டுக்கு எது எப்படி இருந்தாலும் தென்னுட்டைப் பொறுத்தவரை இந்தி துளியும் தேவையில்லை. ஏனெனில் தென்னுடு இன்ருே நாளையோ மறு நாளோ ஏதேனும் ஓர் நாள் வடநாட்டினின்றும் பிரிந்து தனிச் சுதந்தர குடியாட்சி அமைக்க இருக்கிறது. தனி நாட்டுணர்ச்சியுடைய தென்னுட்டுத் திராவிடர்மீது வேண்டாத இந்தியைத் திணிப்பது உலகப் பொதுச் சட்டப்படி குற்றம் மட்டுமல்ல, முதல்தரமான அரசியல் பாவமுங்கூட.

(9) பல மொழியினர் உள்ள ஒரு கூட்டாட்சியில் ஒரு மொழியினரின் தாய் மொழியை பிறர் எல்லார்க்கும் கட்டாயமாக்குவது அந்த ஒரு மொழியினருக்கு சர்வாதிகாரமும் ஏதேச்சாதிகாரமும் தருவது தவிர வேறில்லை. இந்த முறையில் இந்தி இந்திய கண்டத்தின் பொது மொழியாகவும் தென்னுட்டில் கட்டாய பாடமாகவும் ஆகுமானல், முன்னமே அரசியல் துறையிலும் வியாபாரத் துறையிலும் வடநாட்டவர்க்கு அடிமைகளாய்க் கிடந்து அல்லலுறும் திராவிட மக்கள் இனி மொழித் துறையிலும் அடிமைகளாவர். இந்த நிலையை நாமே உண்டுபண்ணுவதும், வேறு எவரேனும் உண்டு பண்ணினல் அதைத் தடுக்காமல் இருப்பதும் நம் நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் நாம் துரோகம் செய்கிறோம் என்று தானே பொருள்படும்?

ஆகவே எந்த விதத்தில் பார்த்தாலும் கட்டாயஇந்தி கொஞ்சமும் தேவையில்லாதது. பேராபத்தை விளைக்கக் கூடியது. தமிழகத்தைத் தலை குனியச் செய்யக் கூடியது. வடநாட்டவர்க்கே மேலும் மேலும் ஆக்கம் தருவது.

இத்தகைய இந்நிலையைத்தான் நாம் எதிர்க்கிறோம். தவறு?

நேர்மையில் நாட்டமுடையோர், தமிழ் நாட்டில் பற்றுடையோர், தமிழிடம் அன்புடையோர் பதில் கூறட்டும்.

மதிப்புரை

பலசரக்கு மூட்டை

[குத்தூசித் தொகுப்பு. விலை 0 8 0. 160 பக்கங்கள் விடுதலை நிலையம், சென்னை 2].

நண்பர் "குத்தூசி" யார் விடுதலை இதழில் எழுதி வந்தாரே பல அருமையான நகைச் சுவைக் கட்டுரைகள் அவற்றின் தொகுப்பு இந்நூல். நெல், அரிசி, துவரை, கேழ்வரகு, உளுந்து, நவதானியம் என்ற ஐந்து பகுதிகள் கொண்டது. எந்தப் பக்கத்தை எடுத்துப் படித்தாலும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கத் தோன்றுகிறது. அங்கங்கே இன உணர்ச்சியற்ற திராவிடர்க்கு "பெனிசிலின் இஞ்சக்ஷன்" இருக்கிறது. பல இடங்களில் ஆரிய ஆணவத்திற்குச் சரியான சவுக்கடி தருகிறார் குத்தூசி யார். எத்தனை முறை படித்தாலும் சலிப்புத் தட்டாத சுவை மிக்க நூல். நீண்ட நாளைய சுயமரியாதைக்காரரும், மாஜி சர்க்கார் அலுவலரும், இந்நாள் பத்திரிகாசிரியரும், சிறந்த பேச்சாளரும், அழகிய எழுத்தாளருமாகிய "குத்தூசி"யாரின் இப்"பலசரக்கு மூட்டை" எல்லாத் தமிழர் வீட்டிலும் —குறிப்பாகத் தேசியத் தோழர்கள் வீட்டில்— அவசியம் இருக்க வேண்டும். அதற்காகத்தானே என்னவோ இந்த மிக மிக அருமையான புத்தகத்தின் விலை மிக மிக மலிவாக வைக்கப்பட்டிருக்கிறது!

தொடர்கதை :

பதிநான்காவது பகுதி

ஓயாத அழுகுரல்

"அய்யோ கடவுளே!" என்ற அழுகுரல் வந்த திசையை நோக்கி அவர்களின் கண்களும் காதுகளும் திரும்பின. காற்றினில் மிதந்து வந்த அழுகுரலின் சப்தம் வரவர அதிகமாயிற்று. உட்கார்ந்திருந்தவர் எழுந்து நின்று, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு மெதுவாகப்பேச ஆரம்பித்தனர்.

கோபால்: எங்கிருந்து வருகிறது அழுகுரல்?

ஆண்டி:—வடக்கிலிருந்து தான் வருகிறது!

வேணி:—பெண் குரல் போல் தெரிகிறதே!

குமார்:—ஆமாம்! அப்படித் தான் தோன்றுகிறது.

வே:—ஏன் அழுகிருள்?

கு:—யாருக்குத்தெரியும்? பாபம், என்ன ஆபத்து நேர்ந்ததோ!

வே:—அங்குப்போய் பார்க்கலாமே அண்ணு!

ஆ:—வேண்டாமம்மா, வேண்டாம்! நாம் அங்குப்போகக்கூடாது.

கோ:-ஏன் ஆண்டிபோகக்கூடாது?

ஆ:—இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது.

கு:—ஆண்டி! சூழ்ச்சியா? பாபம் பெண் எவளோ கதறுகிருள், அதிலே என்ன சூழ்ச்சி இருக்கும்?

வே:—ஓயாது அழுகிருள், நாம் போய் தான் பார்க்க வேண்டும்!

ஆ:—நீ சின்ன குழந்தை அம்மா! உனக்கு ஒன்றும் தெரியாது. போலீஸார் இப்படி யாராவது ஒரு பெண்ணை ஏற்பாடு செய்து இரவில் அழச் செய்திருப்பார்கள்! அப்படிப் பெண் அழுதா, உன் அண்ணுவும், குமாரும் ஓடிவந்து என்னவென்று கேட்பார்கள்! அப்பொழுது பிடித்துக் கொள்ளலாம் என்று போலீஸார் சூழ்ச்சி செய்திருப்பார்கள்! ஆமாம்! நான்சொல்கிறேன், அப்படித்தான் இருக்கும்!

கு:—சேச்சே! அப்படியொன்றுமிருக்காதப்பா! உண்மையாகத் தான் அழுவதாக எனக்குத் தோன்றுகிறது.

வே:—எனக்கும் அப்படித்தான் தெரிகிறது!

கோ:—சரி, போய்த்தான் பார்ப்போமே!

ஆ:—எனக்கென்னமோ பயமாகவே இருக்கிறது.

கோ:—அப்படியானல் நீயும், வேணியும் வீட்டிற்குப்போய் விடுங்கள்! நாங்கள் இருவர் மட்டும் சென்று பாக்கிறேம்.

வே:—நான் பார்த்து விட்டுதான் போவேன் அண்ணு!

கு:—போலீஸார் எங்களோடு உன்னையும் பிடித்துக்கொண்டால்?

வே:—நீங்களெல்லாம் சிறைக்குப் போகும்போது, நான் மட்டும் வர பயப்படுவேனு?

கு:—சபாஷ் வேணி! பார்த்தாபா ஆண்டி! வேணிக்கு இருக்
கும் தைரியம்கூட உனக்கில்
ஆ:—நான் மட்டும் கோ
இதோ புறப்பட்டே விட்டே
அழுகுரல் வந்த திக்கை
அனைவரும் நடந்தார்கள்.
களுக்கு முன்னல் சர்
நடந்து கொண்டிருந்தான்!
லிய காற்று இனிமையாகத்
ந்து வந்தது. ஆற்றின் த
தங்க நிறம் பெற்று, தகதக
பிரகாசித்தது! வெள்ளிநிற
கள் நீரில் துள்ளிக் கு
கொண்டிருந்தன!

பெண்ணின் அழுகுரல்
கேட்டுக் கொண்டிருந்தது.
மாக நடந்தார்கள். அந்தக்
ஒவ்வொருவர் உள்ளத்திலு
தாவது பயத்தை உண்ட
வில்லை! ஆனல் ஒருவருக்கெ
தங்களது பயத்தை வெ
காட்டிக் கொள்ளாமல், தை
கொண்டவர்களைப் போல
தார்கள்! அக்குரல், அங்கே
ஒவ்வொருவர் காதிலும் வெவ்
விதமாக ஒலித்தது!

பார்ப்பனனுக்கு அடிமை
தர்ப்பை எடுத்துவர கா
சென்ற தன் அருமை மகன்,
தீண்டி இறக்க, அவனை நடு இ
சுடலையில் வைத்து தீ மூட்டிக்
அழுத சுந்தரமதியின் ஒப்பாரி
போல் கேட்டது ஆண்டிக்கு
வறுமையின் கோரப்
இடையே சிக்கி, கற்பிற்கரசி
தன் மனைவியின் காற்சில
விற்கச் சென்ற கோவலன்,
டியனல் கள்வனென்று பழி
தப்பட்டு, கொலை செய்யப்பட்
என்ற செய்தியைச் செவி
கண்ணகி கதறிஎழுந்தாளே,
அழுகுரலைப் போல் தோன்
வேணிக்கு!

அன்னியர் ஆட்சியின்
மைக்கு ஆளாகி, இன்னலா
துடித்துக் கொண்டிருந்த பி
னர்களுக்கு, உணர்ச்சின
ஊட்டி அவர்கள் உள்ளங்
குடிகொண்டிருந்த கோழைத்
தையும் அறியாமையும்
அவர்களைப் புரட்சி வீரர்கள
மணிலாவின் மாவீரன் ரி
ஸ்பானியர் சுட்டுக் கொன்ற
தில், அந்த அக்கிரமத்தைக்
அலறிக் கதறிய ரிசாலின்
மனைவியின் கூக்குரலைப்
ஒலித்தது குமாருக்கு! (தொ

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliya
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (H